சார்பு நீதிமன்றம், பண்ருட்டி. நாள்:24.07.2025

O.S. No.165/2018

வா.சா.1 - ஜெயலட்சுமி (வாதி இளவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்கிறார்)

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய வா.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு. ஜெ.அன்வர் சதாத்,பி.காம்., எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணத்தின் பேரில் 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு எவ்வளவு இடத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1 ஏக்கருக்கு. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி எனது கணவர் என்றால் சரிதான். எனது குழந்தைகளை பராமரிக்காததால் நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நானோ என் பிள்ளைகளோ என் கணவரிடம் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சி அட்டவணை சொத்து தான் என் கணவருக்கு பாத்தியமானது என்றால் சரிதான்.

2. மேற்படி பாகத்தில் என் கணவருக்கு வந்த சொத்தில் 1 ஏக்கரை மட்டும் என் கணவர் 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார், அந்த 1 ஏக்கரை தான் தாவா சொத்தாக காட்டி அவருடைய பிள்ளைகளான இளவர் வாதிகள் இந்த பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல, மொத்த சொத்திற்கும் தான் போட்டுள்ளார்கள். அவ்வாறு நான் பாக வழக்கு முழு சொத்திற்கும் கேட்கவில்லை, 1 ஏக்கருக்கு மட்டும் தான் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட 1 ஏக்கர் சொத்தில் 80 செண்ட் நிலத்தை மீண்டும் 2 ம் பிரதிவாதி என் கணவராகி 1ம் பிரதிவாதிக்கு 02.04.2018 தேதியில் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள 2 ம் ஆவணத்தில் என்னுடைய மாமனார் முருகேசன் ஒரு கையெழுத்தும், எனது நாத்தனார் தேன்மொழி ஒரு கையெழுத்தும், எனது மூத்தார் செந்தாமரை கண்ணன் என்பவரும் ஒரு கையெழுத்தும் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மீதி உள்ள 20 செண்டில் 2 ம் பிரதிவாதி வேலன் என்ற பெயரில் ஒரு பெட்ரோல் பங்க் நடத்தி வருகிறார் என்றால் நடத்தி வருகிறார், சாட்சி தொடர்ந்து சொல்கிறார் நடத்தவில்லை.

4. என் கணவருடன் தான் இருக்கிறேன் என்றும், வழக்கிறாக கணவருடன் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடம் பணம் பரிக்கும் நோக்கில் இளவர்கள் மைனருக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, எனவே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய சட்ட உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பாகம் கேட்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்திருப்பின், வா.சா.ஆ.1ல் உள்ள சி அட்டவணையில் கண்ட சொத்து அனைத்திற்கும் தாக்கல் செய்திருப்பேன் அவ்வாறு தாக்கல் செய்யாதிருப்பதினால் தவறான நோக்கத்துடன் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.